இலங்கை பொறியியற் பேரவை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பொறியியற் பேரவையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து பேரவையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அலுவலகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அலுவலகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அலுவலகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன்

தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பேரவையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பேரவையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அலுவலகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
பேரவையானது முறையான நிலையான சொத்துக்கள் பதிவேட்டை பராமரிக்கவில்லை என்பதுடன், சொத்தை வாங்கிய திகதி மற்றும் அதன் பெறுமதி என்பன அடங்கிய பட்டியல் மட்டுமே உள்ளது. அதில், சொத்துக்களுக்குரிய வருடத்தின் பெறுமானத்தேய்வுப் பெறுமதி மற்றும் வருட ஆரம்பம் மற்றும் முடிவில் உள்ள மொத்தத் பெறுமானத்தேய்வுப் பெறுமதிகள் என்பன காட்டப்படவில்லை. இதனால், ஒவ்வொரு சொத்தும் பெறுமானத்தேய்வும் முடிவடைந்துவிட்டதா என்பது தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், அந்தச் சொத்துப் பட்டியலில் உள்ள கணினி மற்றும் அலுவலக	எதிர்காலத்தில் இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியான நிலையான சொத்துக்கள் பதிவேட்டைத் தயாரிப்பது உடனடியாகச் செய்யப்பட வேண்டும். அதற்கமைய, சொத்து மீதிகள் மற்றும் பெறுமானத்தேய்வு ஒதுக்கீடுகள் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

உபகரணங்களின் பெறுமதிகளுக்கும், நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள அந்தப் பெறுமதிகளுக்கும் இடையில் ரூபா 224,440 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் மீண்டும் வெளியிடப்பட்டிருந்தாலும் (Restated), இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் 03 இன் பந்தி 54 இன் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல்கள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படவில்லை.	எதிர்காலத்தில் இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் 03 இன் பந்தி 54 இன் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை பொறியியற் பேரவையானது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதான கட்டிடத்தின் 4 ஆவது மாடியில் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், அந்தத் திணைக்களத்தின் மின்சாரம் மற்றும் நீர் இணைப்புகளையும் பொறியியற் பேரவை பயன்படுத்துகின்றது. ஆயினும், இது தொடர்பாகத் திணைக்களத்துடன் எந்தவொரு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், அந்தத் திணைக்களத்துக்கு எந்தவொரு கட்டணமும் செலுத்தப்படாததால், எதிர்காலத்தில் எழக்கூடிய நிகழத்தக்க பொறுப்புக்களுக்காக இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் 08 இன் பந்தி 100 இற்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் செய்யப்படவில்லை.	இது குறித்து இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் 08 இன் பந்தி 100 இற்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடுவதற்குப் பதியப்பட்டுள்ளது.	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க, எழக்கூடிய நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	கடந்த வருடத்திற்காக மீளாய்வாண்டில் பெறப்பட்ட பதிவுக் கட்டண வருமானமான ரூபா 795,000 ஆனது, திரட்டப்பட்ட மிகைக்கு சீராக்கப்படுவதற்கு பதிலாக, மீளாய்வாண்டின் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 795,000 இனால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.	வருமான அறிக்கைத் நியமத்திற்கு இணங்க, 2023 ஆம் ஆண்டிற்காக அட்டுறு அடிப்படையில் ரூபா 1,000,000 இனை 2024 ஆம் ஆண்டில் பெறப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், திரட்டப்பட்ட தொகை ரூபா 1,795,000 ஆக இருந்ததால்,	பேரவையின் வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும் என்பதால், அடுத்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட

		மேலதிகமாகப் பெறப்பட்ட ரூபா 795,000 ஆனது 2024 ஆம் ஆண்டின் வருமானமாகக் கணக்கிடப்பட்டது. பொறியியல் வல்லுநர்களின் விருப்புரிமைக்கேற்ப பதிவு மற்றும் பணம் பெறப்படுதல் என்பன இடம்பெறும்.	வேண்டும்.
(ஆ)	பேரவையின் பெண் உத்தியோகத்தரொருவருக்கு 2023 ஆம் ஆண்டிற்குரியதாக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 600,000 விசேட ஊக்கத்தொகையானது, திரட்டப்பட்ட இலாபத்திற்கு சீராக்குவதற்குப் பதிலாக, மீளாய்வாண்டின் ஊக்கத்தொகை செலவினத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டது. இதனால், வருடத்தின் செலவுகள் அந்தத் தொகையினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தன.	இந்தச் செலுத்துகை 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதால், அது அந்த வருடத்தின் கணக்குகளில் பதிவுசெய்யப்பட வேண்டியிருந்தது. எதிர்காலத்தில் இதுபோன்ற குறைபாடுகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.	காலப்பகுதிக்கு உரிய செலவுகள் மட்டுமே நிதிச் செயலாற்றல் அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டும் என்பதால், அடுத்த வருட நிதிக்கூற்றுக்களில் இந்தக் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கு உரிய திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை (Contribution) மொத்தமாக ரூபா 2,089,365 ஆனது மீளாய்வாண்டின் செயற்பாட்டு செலவுகளாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால், ஆண்டிற்கான செயற்பாட்டுச் செலவுகள் அந்தத் தொகையினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தன. மேலும், இதில் 2023 ஆம் ஆண்டிற்கு உரிய ரூபா 1,000,000 பங்களிப்புத் தொகையை திரட்டப்பட்ட இலாபத்துடன் சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,000,000 வரியைச் செலுத்துமாறு பொது முயற்சிகள் திணைக்களம் எமக்கு அறிவித்தது. அந்தக் காலப்பகுதியில் 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் முடிக்கப்பட்டிருந்ததால், அதற்கான பணத்தை 2024 ஆம் ஆண்டிற்கு உரிய நிதியிலிருந்து செலுத்த வேண்டியதாயிற்று. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் வரிகளை உரிய முறையில் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதால், அவற்றைச் சரியான முறையில் கணக்கு வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.	மிகையிலிருந்து திறைசேரிக்குச் செலுத்தப்பட்ட பங்களிப்புத் தொகையின் பெறுமதியை அடுத்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2017 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க இலங்கை பொறியியற் பேரவைச் சட்டம்			
(i)	பிரிவு 12(ஈ)	பொறியியல் வல்லுநர்களின் தொழில் தகாத நடத்தைகளுக்கு ஏற்புடைய சில விடயங்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டிய போதிலும், பொறியியல் தொழிலில் ஈடுபடும் வல்லுநர்களினால் கடைப்பிடிக்கப்பட வேண்டியதென அறிமுகப்படுத்தப்பட்ட தொழில் நெறிமுறைகளின்படி பொறியியலாளர்கள் செயலாற்றுகிறார்களா என்பது பற்றி இனங்கண்டு பரிசோதிப்பதற்கான நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படவில்லை.	பொறியியல் வல்லுநர்களின் தொழில் தகாத நடத்தைகளுக்கு ஏற்புடைய நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான சட்டவிதிகள் 2022 செப்தம்பர் 21 ஆந் திகதிய வர்த்மானி இலக்கம் 2298/27 இன் கீழ் வெளியிடப்பட்டுள்ளன. தற்போது, அதற்கு தேவையான உள்ளக செயன்முறைகள் (Internal Processes) தயாரிக்கப்பட்டு வருகின்றன.	இலங்கை பொறியியற் பேரவைச் சட்டத்தின் விதிகளுக்கு அமைய, பொறியியலாளர்கள் தொழில்முறை ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிக்கிறார்களா என்பதைப் பரிசோதிப்பதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ii)	பிரிவு 14.1	எந்தவொரு பொறியியல் வல்லுநரும், பிரிவு 15 அல்லது 18 இன் கீழ் ஒரு பொறியியல் வல்லுநராகப் பதிவுசெய்திருந்தாலன்றி, அவர் பொறியியல் தொழிலுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது. அதன்படி, இலங்கை பொறியியலாளர் நிறுவனம் (IESL) மற்றும் இலங்கை நியதிச்சட்ட பொறியியலாளர் நிறுவனம் (IIESL) ஆகிய இரண்டு நிறுவனங்களிலும்	இலங்கை பொறியியற் பேரவையின் தரவுத் தளத்தில் (Database) பெயர்கள் இருந்தும் பதிவு செய்யாத IESL மற்றும் IIESL உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மற்றும் குறுகிய செய்திகள் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டதுடன், பட்டயப் பொறியியலாளர்களின் பதிவை உறுதிப்படுத்த	இலங்கை பொறியியலாளர் நிறுவனம் (IESL) மற்றும் இலங்கை ச உாயசவநசநன பொறியியலாளர் நிறுவனம் (IIESL) ஆகிய இரண்டு நிறுவனங்களிலும் பதிவு செய்துள்ள அனைத்து

		பதிவு செய்துள்ள உறுப்பினர்களை, பொறியியற் பேரவையின் உறுப்பினர்களாகப் பதிவு செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன், மேற்குறிப்பிட்ட இரண்டு நிறுவனங்களிலும் 2024 ஆம் ஆண்டில் பொறியியல் தொழிலில் ஈடுபட்டிருந்த 29,891 பேர் அங்கத்துவம் பெற்றிருந்த போதிலும், அவர்களில் 17,072 பேர், அதாவது 57.11 வீதமானோர் மட்டுமே பொறியியற் பேரவையில் பதிவு செய்திருந்தனர்.	பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பொது அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அரசாங்க நிறுவனங்களில் பணிபுரியும் பொறியியலாளர்களின் பதிவை உறுதிப்படுத்த, பொறியியல் சேவைகள் பணிப்பாளர் மற்றும் அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டது. ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளிலும் இலங்கை பொறியியற் பேரவையின் பதிவை கட்டாயமாக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.	உறுப்பினர்களையும் பேரவையில் பதிவு செய்து கொள்வதற்காக, ஒரு பயனுள்ள பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) மற்றும் 38(2) ஆம் பிரிவுகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் ஒவ்வொரு நிறுவனத்தினதும் நிதிக் கட்டுப்பாடு தொடர்பில் ஒரு பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை தயாரித்து, அதனைப் பராமரித்து வருவதை உறுதிசெய்ய வேண்டும். அத்துடன், அந்தக் கட்டுப்பாட்டு முறையின் செயலாற்றல் குறித்துக் காலத்துக்குக் காலம் எழுத்து மூலமான மீளாய்வை மேற்கொண்டு, அதற்கமைய அந்தக் கட்டுப்பாட்டு முறையைப் பயனுள்ளதாகக் கொண்டு செல்வதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்து, அதன் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்க வேண்டும். ஆயினும், பேரவை அதற்கமைய செயற்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவுகள் 38(1)(இ) மற்றும் 38(2) இற்கு அமைய, ஒரு பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறையைத் தயாரித்து, கால அடிப்படையில் மீளாய்வு செய்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	1985 இன் 01 ஆம் இலக்க ஊழியர் சேம	பேரவையானது நிதியத்திற்குப் பங்களிப்புச் செலுத்தும் போது, ஊழியர்களின் போக்குவரத்து	இது தொடர்பாகத் தொழிலாளர் ஆணையாளரின்	ஊழியர் சேம நிதியச் சட்டத்தின்

	நிதிய (திருத்தப்பட்ட) சட்டத்தின் பிரிவு 47	கொடுப்பனவுகள், எரிபொருள் கொடுப்பனவுகள், தொலைபேசி கொடுப்பனவுகள், தொழில்முறை கொடுப்பனவுகள் மற்றும் விசேட கொடுப்பனவுகள் போன்றவற்றை வருமானத்தைக் கணக்கிடுவதற்கு பயன்படுத்தியுள்ளது. இதன் காரணமாக, குறித்த கொடுப்பனவுகளிலிருந்து 15 சதவீதத்தைச் பேரவையின் பங்களிப்பாக அதிகமாகச் செலுத்தியுள்ளதுடன், ஊழியரின் பங்களிப்பாக 10 சதவீதத்தை அதிகமாக அறவிட்டுச் செலுத்தியுள்ளது.	(ஊ.சே.நி) கருத்து பெறப்பட்டது. இதற்கு அவர்களின் அனுமதி தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.	விதிமுறைகளுக்கு இணங்க பங்களிப்புக்களை அறவிடுவதும் செலுத்துவதும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஈ)	1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரிவு 44	பேரவையானது நிதியத்திற்குப் பங்களிப்புச் செலுத்தும் போது, சம்பளத்தைக் கணக்கு வைக்கவதற்காகப் போக்குவரத்து கொடுப்பனவுகள், எரிபொருள் கொடுப்பனவுகள், தொலைபேசி கொடுப்பனவுகள், தொழில்முறை கொடுப்பனவுகள் மற்றும் விசேட கொடுப்பனவுகள் போன்றவற்றை பயன்படுத்தியதால், இந்தக் கொடுப்பனவுகளிலிருந்து 3 வீதத்தை அதிகமாகச் செலுத்தியுள்ளது.	இது தொடர்பாகத் தொழிலாளர் ஆணையாளரின் கருத்து பெறப்பட்டது. இதற்கு அவர்களின் அனுமதி தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.	ஊழியர் நம்பக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு இணங்க பங்களிப்புக்களைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின்			
(i)	VIII ஆம் அத்தியாயத்தின் 10:1 ஆம் உட்பிரிவு	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவருக்கு 2024 ஜனவரி முதல் திசெம்பர் வரையிலான காலப்பகுதியில் வார இறுதி நாட்கள் மற்றும் அரச விடுமுறை நாட்கள் உட்பட 96 நாட்கள் வீட்டிலிருந்து கடமைகளை நிறைவேற்றியமைக்காக,	வீட்டிலிருந்து கடமைகளை நிறைவேற்றும் போது, கடமை செய்த காலத்தை மற்றும் நிறைவேற்றிய கடமைகளை உறுதிப்படுத்துவதற்காக ஒரு பொறிமுறை தயாரிக்கப்பட்டுள்ளது.	விடுமுறை நாட்களில் சேவை செய்தல் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் செலுத்துதல் ஆகியவை குறித்து தாபனவிதிக்

		மாதாந்தச் சம்பளத்தில் 1/20 பங்கு வீதம், மொத்தமாக ரூபா 269,841 விடுமுறை நாள் சம்பளமாகவும், அத்துடன் ரூபா 48,571 ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியப் பங்களிப்பாகவும் செலுத்தப்பட்டிருந்தது. அதேபோல், கடந்த வருடத்திலும் இதற்காகச் பேரவையால் ரூபா 310,627 செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, இந்த உத்தியோகத்தர் உட்பட இரண்டு உத்தியோகத்தர்கள் தலா 64 கடமை நாட்களை வீட்டிலிருந்து நிறைவேற்றியிருந்த நிலையில், மீளாய்வாண்டில் அந்த இரண்டு உத்தியோகத்தர்களும் முறையே 29 நாட்களையும் மற்றும் 30 நாட்களையும் சேமித்த விடுமுறை நாட்களுக்காக ரூபா 57,300 மற்றும் ரூபா 28,510 என்ற தொகை செலுத்தப்பட்டிருந்தது.	இலங்கை பொறியியற் பேரவையின் பணிகள் தடையில்லாமலும் திறமையாகவும் முன்னெடுக்கப்படுவதற்காக, சில விடுமுறை நாட்களில் இணையம் மூலம் ஊழியர்களால் கடமைகள் மேற்கொள்ளப்பட்டன. விடுமுறை நாள் சம்பளமானது தலைவரின் மேற்பார்வையின் கீழ், கடமை செய்த காலம் உறுதிப்படுத்தப்பட்டு, பயனுள்ள பணிக்குப் பின்னரே செலுத்தப்பட்டது.	கோவையின் விதிமுறைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் XII இன் உபபிரிவு 1:7	அனுமதிக்கப்பட்ட விடுமுறைகள் தொடர்பான பதிவேட்டை, பொதுப் படிவம் 190 இற்கு அமையப் பராமரிக்க வேண்டியிருந்தும், பேரவையின் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் விடுமுறைகளுக்காக அதற்கிணங்க விடுமுறைப் பதிவேடு பராமரிக்கப்படவில்லை.	2024 ஆம் ஆண்டில் நாம் பயன்படுத்திய மற்றும் தற்போது பயன்படுத்தி வரும் விடுமுறைப் பதிவேட்டில், பொதுப் படிவம் 190 இற்கு அமைய இருக்க வேண்டிய அனைத்து அத்தியாவசிய விபரங்களும் உள்ளடங்கி உள்ளன.	தாபனவிதிக் கோவையின் விதிமுறைகளுக்கு இணங்க விடுமுறைகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,541,853 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 9,319,574 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 6,777,721 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு ஏயை செயற்பாட்டு செலவினங்களினுள் சட்டச் செலவினங்கள் மற்றும் வாகன செயற்பாட்டு குத்தகைச் செலவினம் ரூபா 5,672,360 இனால் அதிகரித்தமை மற்றும் திறைசேரிக்கு செலுத்தப்பட்ட பங்களிப்புத் தொகை ரூபா 2,089,365 செயற்பாட்டு செலவினத்தினுள் உள்ளடக்கப்பட்டமை என்பன பிரதான காரணங்களாகும்.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

2023 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலும் பேரவையின் நிதிச் செயலாற்றல் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

விபரம்	**2024 ரூபா**	**2023 ரூபா**	**வேறுபாடு அதிகரிப்பு/(குறைவு) ரூபா**	**வேறுபாட்டின் சதவீதம்**
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான வருமானம்	21,111,994	19,596,000	1,515,994	8
நிதி வருமானம்	4,920,643	7,744,148	(2,823,505)	36
நிர்வாகச் செலவினம்	11,228,697	11,124,414	104,283	1
ஒப்பந்தச் சேவைகள் மற்றும் பராமரிப்பு செலவினம்	2,217,943	2,165,077	52,866	2
ஏனைய செயற்பாட்டு செலவினங்கள்	8,075,058	772,836	7,302,222	945

2.3 விகிதப் பகுப்பாய்வு

பேரவையின் நடைமுறை விகிதம் மீளாய்வாண்டிலும் கடந்த வருடத்திலும் 13:1 ஆக இருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் தேறிய இலாப விகிதம் 71 சதவீதத்தினால் குறைவடைவதற்கு, ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் அதிகரித்தமை நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	**முகாமைத்துவ கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	2020 ஜூலை 09 ஆம் திகதி முதல் பேரவையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்காக JM 1-1 சம்பளக் குறியீட்டின் கீழ் கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்தின் உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார். பின்னர், 2021 ஒக்டோபர் 15 ஆம் திகதி முதல் MM 1-1 சம்பளக் குறியீட்டிற்கு மத்திய முகாமைத்துவ மட்டத்திற்கு அவர் நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து, HM 1-3 சம்பளக் குறியீட்டின் கீழ் உள்ள பிரதான தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின்படி தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யாத போதிலும், அந்தப் பதவியின் கடமைகளை	இந்தப் விடயம் தொடர்பாகச் சம்பள ஆணைக்குழு, அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆகியவற்றுடன் விரிவான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, MM 1-1 சம்பளக் குறியீட்டில் இருந்த பிரதான தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியை HM 1-3 சம்பளக் குறியீடு வரை அதிகரிக்குமாறு சம்பள ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டது. அதற்கமைய, முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அதனைச் செயல்படுத்தி, அது குறித்து எமக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளது.	அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு அமைய மட்டுமே உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும்.

	நிறைவேற்றுவதற்காக, MM 1-1 சம்பளக் குறியீட்டின் கீழ் இருந்த அந்தத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் 2022 நவம்பர் 28 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தார்.		
(ஆ)	முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2022 ஒக்டோபர் 18 ஆம் திகதிய இல. DMS / 1850 கடிதத்தின் மூலம், HM 1-3 சம்பளக் குறியீட்டின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் உள்ள பிரதான தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு, MM 1-1 சம்பளக் குறியீட்டின் கீழ் தனிப்பட்ட முறையில் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்யின் பதவி வெற்றிடமான பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், ஒரே நேரத்தில் இரண்டு பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு செய்யக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் II, உபபிரிவு 13.5 இன் பிரகாரம், வெற்றிடமான பதவிகளை உடனடியாக நிரப்ப வேண்டியிருந்தால் மட்டுமே கடமைகளை நிறைவேற்ற ஒருவரை நியமிக்க வேண்டும். ஆனால், HM 1-3 குறியீட்டின் கீழ் உள்ள பதவிக்கு வெற்றிடம் இருக்கவில்லை என்பதும், மேலும் இது ஒரே கடமையாக இருந்ததால், ஒரே நேரத்தில் இரண்டு பதவிகளையும் செயல்படுத்த முடியாது என்பதும் அவதானிக்கப்பட்டது. ஆயினும், குறித்த உத்தியோகத்தர்க்கு அந்தக் கடமைகளை நிறைவேற்ற நியமனம் வழங்கப்பட்டதுடன், அதற்காக மீளாய்வாண்டில் கடமை நிறைவேற்றல் கொடுப்பனவு, ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியப் பங்களிப்பு என முறையே ரூபா 245,187, ரூபா 36,778 மற்றும் ரூபா 7,355 வீதம் மொத்தமாக ரூபா	பிரதான தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்யின் பதவி HM 1-3 சம்பளக் குறியீட்டிற்கு மாற்றப்பட்டிருந்தாலும், தற்போது அதில் MM 1-1 சம்பளக் குறியீட்டிற்குரிய உத்தியோகத்தர் ஒருவர் சேவையாற்றுகிறார். அந்த உத்தியோகத்தர் HM 1-3 சம்பளக் குறியீட்டிற்குத் தேவையான அனைத்து கல்வித் தகைமைகளையும் மேலதிகமாகத் தொழில்முறைத் தகைமைகளையும் (Professional Qualifications) பூர்த்தி செய்திருந்தாலும், தேவையான 15 வருட அனுபவத்தைப் பூர்த்தி செய்யாததால் அவரை உள்ளீர்க்க முடியவில்லை. இருப்பினும், அந்த உத்தியோகத்தர் HM 1-3 சம்பளக் குறியீட்டிற்கு உரிய பேரவையின் கடமைகளை மிகவும் திறமையாக நிறைவேற்றி வருகிறார். நிறுவனம் தகவல் தொழில்நுட்பத்தில் அதிகளவில் தங்கியிருப்பதன் காரணமாகவும், அதன் நிலைத்தன்மையை கருத்தில் கொண்டும், அந்தப் பதவியில் கடமையாற்றும் உத்தியோகத்தர் HM 1-3 சம்பளக் குறியீட்டிற்குத் தேவையான 15 வருட சேவை அனுபவத்தைப் பூர்த்தி செய்யும் வரை கடமைகளைத் தொடர்ந்து முன்னெடுக்கச் பேரவை தீர்மானித்துள்ளது.	ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவம் கொண்ட உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே நியமனங்கள் வழங்கப்பட வேண்டும், மேலும் தேவையான திருத்தங்களுக்கு முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

	289,320 செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் VII, பிரிவு 12.2.6 இன் பிரகாரம் அமைச்சின் செயலாளரின் அனுமதி பெறப்படவில்லை. மேலும், திறைசேரியின் அனுமதி இன்றி HM 1-3 தரத்திற்குரிய வாகனக் கொடுப்பனவாக ரூபா 600,000 உம், எரிபொருள் கொடுப்பனவாக ரூபா 477,595 உம் 2024 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன், HM 1-3 சம்பளக் குறியீட்டிற்குத் தேவையான 15 வருட சேவை அனுபவத்தைப் பூர்த்தி செய்யும் வரை கடமைகளைத் தொடர்ந்து முன்னெடுக்கச் பேரவை தீர்மானித்திருந்தது.		

3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	பேரவையில் 05 பதவிகள் வெற்றிடமாக இருந்தபோதிலும், ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கோ அல்லது பதவிகளின் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	இலங்கை பொறியியற் பேரவை 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 9 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. ஆனால், ஆரம்ப காலத்தில் அனைத்து வெற்றிடங்களையும் நிரப்ப வேண்டிய அவசியம் இல்லாததால், ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும், எதிர்காலத்தில் இந்தப் பதவிகள் தேவைப்படலாம் என்பதால், பதவிகளின் எண்ணிக்கையை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பேரவையின் பணிகளுக்கு அமைய, பதவிகளின் எண்ணிக்கையைத் திருத்தம் செய்வதற்கோ அல்லது அத்தியாவசியமான பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 ஆண்டறிக்கை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 இலக்கமுடைய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்கத்துக்குச் சொந்தமான முயற்சிகளுக்கான செயற்பாட்டு கையேட்டின் 6.6 ஆம் பந்திக்கு முரணாக 2023 ஆம் ஆண்டிற்கான பேரவையின் வருடாந்த அறிக்கை 2025 ஏப்ரல் மாதம் வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.	இது எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களால் இன்னும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. இது குறித்து நாம் தொடர்ந்து விசாரித்ததன் விளைவாக, தற்போது இது நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சின் உள்நாட்டுச் செயல்முறையை நிறைவு செய்து, செயலாளரின் அனுமதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு, அது அமைச்சரவைக்கு அனுப்பப்படும்.	வருடாந்த அறிக்கையானது சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்ததிலிருந்து 5 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதால், அந்தக் பணிகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்.